தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

29.12.2012 A.M

## விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி

கள்ளக்குறிச்சியை அடுத்த ஏமப்பேர் கிராமத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

வேளாண்மை இணை இயக்குனர் டி.சேகர் தலைமை வகித்துப் பேசுகையில், விவசாயிகள் விதை கிராமத் திட்டம் மூலம் விதை வாங்கி அதனை விதைப் பண்ணை அமைத்து தரமான சான்று பெற்ற விதைகளாக உற்பத்தி செய்து மீண்டும் அதனைப் பயன்படுத்த வேண்டும்.

இதன் மூலம் கலப்படம் இல்லாமல் அதிக முளைப்புத் திறன் உள்ள தரமான விதைகள் கிடைக்கும் என்றார். வேளாண்மை அலுவலர்கள் எம்.ராஜா, எல்.மொட்டையாப்பிள்ளை உள்ளிட்டோர் விவசாயிகளுக்குப் பயிற்சி

அளித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் கே.தர்மலிங்கம், விதைச் சான்று அலுவலர்கள் ஜே.சீனுவாசன், அன்பழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.பொன்னுராசன், சி.தேவி, விரிவாக்க அலுவலர் ஆர்.கோபால், உதவி வேளாண்மை அலுவலர்கள் டி.தவமணி, குமார், ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பசுக்களுக்கு 75 சதவிகித மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்க வலியுறுத்தல்

புதுச்சேரியில் பசுக்களுக்கு 75 சதவிகித மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்க வேண்டும் என்று புதுச்சேரி பால் உற்பத்தியாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

÷புதுச்சேரி பால் உற்பத்தியாளர் சங்கக் கூட்டம் வில்லியனூரில் அண்மையில் நடைபெற்றது.

÷இக்கூட்டத்துக்கு இச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மலர் சேகர் தலைமை தாங்கினார்.

÷விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலர் து.கீதநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வில்லியனூர் தொகுதிச் செயலர் ஆர்.அந்தோணி உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

÷இக்கூட்டத்தில் காசி விசுவநாதன் நகர், மணவெளி ஆகிய பகுதிகளில் பாண்டே கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைத்து பால் கொள்முதல் செய்ய வேண்டும்.

÷பசுக்களுக்கு 75 சதவிகித மானிய விலையில் மாட்டுத் தீவனம் வழங்க வேண்டும். பால் உற்பத்தியை பெருக்கவும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மானிய விலையில் பசுமாடு வாங்கவும் கடன் வழங்க வேண்டும்.

÷தானே புயலின்போது விழுந்த மாட்டு கொட்டகை ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். புதிதாக மாட்டு கொட்டகை அமைக்க முழுமையான மானியத்துடன்கூடிய திட்டத்தை அமலாக்க வேண்டும்.

÷ரேஷன் பொருள்கள் மற்றும் சிலிண்டர்களுக்கு மானியத் தொகை, முதியோர், விதவை, ஊனமுற்றோர் உதவித் தொகை ஆகியவற்றை "உங்கள் பணம் உங்கள் கையில்' என்ற பெயரில் வங்கியில் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

÷கூட்டத்தில் மகேஸ்வரி, சுந்தரி, கோவிந்தம்மாள் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**வேளாண் உபகரணங்கள் வாங்க ரூ. 2.77 கோடி மானியம்'**

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் கருவிகள், உபகரணங்களை விவசாயிகள் வாங்க அரசு மானியமாக ரூ. 2.77 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாக சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் மேலும் தெரிவித்தது:

பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் கொள்முதல் செய்ய, தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய நடப்பு நிதியாண்டில் ரூ. 2.77 கோடியை சிவகங்கை மாவட்டத்திற்கு தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த மானியத்தின் மூலம் பவர் டில்லர், மினி டிராக்டர், களை எடுக்கும் இயந்திரம், கதிர் அடிக்கும் இயந்திரம், பவர் ஸ்பிரேயர், மரம் அறுக்கும் கருவி, நெல் நடவு இயந்திரம், உழவு

உபகரணங்கள், தோட்டக்கலை உபகரணங்கள் கொள்முதல் செய்ய விவசாயிகளுக்கு 25 முதல் 50 சதவீதம் வரையிலும், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு சிறப்பினமாக 50 முதல் 60 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும்.

விருப்பமுள்ள விவசாயிகள் சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், புகைப்படம், விலைப் புள்ளி முதலிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். சிவகங்கை வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள், தொண்டி சாலையில் உள்ள வேளாண் பொறியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், தேவகோட்டை வருவாய்க் கோட்டத்தைச் சேர்ந்தவர்கள் காரைக்குடியில் உள்ள வேளாண் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விவசாயிகள் தங்கள் பங்களிப்புத் தொகையை நிறுவனத்தின் பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்திட தயாராக இருக்க வேண்டும்.

இதுகுறித்து, மேலும் விவரம் அறிய விரும்புவோர் 04575-240213 என்ற தொலைபேசி எண் மூலம் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

விவசாயிகள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விவசாயிகளுக்கு ஆடு வளர்க்கப் பயிற்சி

கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில், குளிர் மற்றும் கோடைகாலத்தில் ஆடு வளர்ப்பு, பராமரிப்பு முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் அறிவியல் மைய தலைவர் பால்பாண்டி பயிற்சி முகாமைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

ராஜபாளையத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மைய தலைவர் தங்கதுரை, ஆடுகளின் வகைகள், வளர்ப்பு ஆடுகளை தேர்ந்தெடுக்கும் முறை, குடில் அமைக்கும் முறை, உணவு தேவை உள்ளிட்டவை குறித்து விளக்கம் அளித்தார்.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். வேளாண் அறிவியல் நிலைய உளவியல் பேராசிரியர் தீபாகரன், உதவி பேராசிரியர் ராஜேந்திரன், ஜெகதீஸ்வரி, முத்துராமு, உதவியாளர்

கவிதா, ரம்யா மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 42.63 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.63 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 112 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.90 டி.எம்.சி.

## விவசாயி தற்கொலை

காட்டுமன்னார்கோயில் அருகே விவசாயி ஒருவர் வயலில் பூச்சிமருந்து குடித்து வெள்ளிக்கிழமை தற்கொலை செய்து கொண்டார்.

÷காட்டுமன்னார்கோயில் அருகே வவ்வாத்தோப்பைச் சேர்ந்த வைத்தியநாதசாமி (71). இவருக்கு 3 மகன்கள். வைத்தியநாதசாமிக்கு வவ்வாத்தோப்பு கிராமத்தில் 6 ஏக்கர் நிலம் உள்ளது. தற்போது கடனை வாங்கி 6 ஏக்கரில் சம்பா சாகுபடியில் ஈடுபட்டுள்ளார். தினமும் வயலுக்குச் சென்று பயிரை கவனித்து வருகிறார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை வயலுக்கு சென்று பயிரை பார்த்துள்ளார். பயிர் பூத்துபால்விடும் நிலையில் நீரின்றி காயந்து வருவதை கண்டு மனமுடைந்தார். உடனே அவர் வயலுக்கு வைத்திருந்த பூச்சிமருந்தைக் குடித்தும், காதில் ஊற்றிக்கொண்டு மயங்கி விழுந்ததாகக் கூறப்படுகிறது. அருகாமையில் வயலில் இருந்தவர்கள் வைத்தியநாதசாமியை காட்டுமன்னார்கோயில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு மருத்துவர்கள் வைத்தியநாதசாமி இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து காட்டுமன்னார்கோயில் போலீஸôர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## ஏற்காட்டில் இன்று இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் இரண்டாவது பருவ (குளிர்கால) மலர்க் கண்காட்சி, கலை விழா சனிக்கிழமை (டிசம்பர் 29) நடைபெறுகிறது.

ஏழைகளின் உதகை என்று அழைக்கப்படும் ஏற்காட்டில் ஆண்டுதோறும் மே, ஜூன் மாதங்களில் கோடை விழா நடத்தப்படும். இந்த நிலையில், உதகையில் நடத்தப்படுவதைப் போன்று

ஏற்காட்டிலும் இரண்டாவது பருவ (குளிர்கால) மலர்க் கண்காட்சி, கலைவிழா நடத்த அரசு முடிவு செய்தது.

அதன்படி, முதலாவது குளிர்கால மலர்க் கண்காட்சி ஏற்காட்டில் சனிக்கிழமை நடைபெறுகிறது. காலை 9 மணிக்கு குதிரைகள் அணி வகுப்புடன் கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் மங்கள இசையும், மதுரை தப்பாட்டக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும், வான வேடிக்கையும் நடைபெறுகிறது. தொடர்ந்து பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியையும், மலர்க் கண்காட்சியையும் ஏற்காடு எம்எல்ஏ செ.பெருமாள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் திறந்து வைக்கிறார்.

பின்னர், அண்ணா கலையரங்கில் கலைவிழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. மேலும், திறந்தவெளி கலையரங்கில் கரூர் கலைக் குழுவினரின் குட்டீஸ் ராஜ்ஜியம் எனும் நடன நிகழ்ச்சி, தப்பாட்ட நிகழ்ச்சியுடன் இணைந்து நடைபெறுகிறது. குழந்தைகளை குதூகலிக்க வைக்கும் வகையில், கொக்கலிக்கட்டை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஏற்காடு திறந்தவெளி மைதானம் அருகே கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாய் கண்காட்சியும், கலையரங்கில் கொழு கொழு குழந்தைகள் போட்டியும் நடைபெறுகிறது. மேலும், மாவட்ட விளையாட்டுத் துறை சார்பில் கைப்பந்து போட்டியும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் படகுப் போட்டியும் நடைபெறுகின்றன.

இதைத் தொடர்ந்து வருவாய்த் துறை சார்பில் இன்னிசை நிகழ்ச்சி, முல்லை நடவரசு குழுவினரின் பாடலுடன் கூடிய நகைச்சுவை பட்டிமன்றம், லிம்போ கேசவனின் தீ நடன நிகழ்ச்சி, கோலப்போட்டி ஆகியவை நடைபெறுகிறது.

விழாவையொட்டி, ஏற்காடு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, ஆவின் நிர்வாகம் சார்பில் குறைந்த விலையில் மதிய உணவு வழங்கப்படுகிறது. மேலும், சேலத்தில் இருந்து சிறப்புப் பேருந்து வசதியும், பாதுகாப்பு ஏற்பாடுகளும், போக்குவரத்து சீரமைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## விதை உற்பத்தி நடைமுறை பயிற்சிகள்

பெரம்பலூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில், மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் செயலர்களுக்கான சான்று விதை உற்பத்தி நடைமுறைகள் குறித்த பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சிக்கு தலைமை வகித்து, மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் உமாமகேஸ்வரி பேசியது:

வேளாண்மையில் உயர் விளைச்சல் பெற தரமான சான்று விதைகளையே

பயன்படுத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உரம், பயிர் பாதுகாப்பு பூச்சி மருந்துகள், பயிர்க் கடன்கள் வழங்கினாலும், தரமான விதைகளையும் சேர்த்து வழங்கா விட்டால் விவசாயிகளுக்கு நாம் செய்யும் பணி முழுமை அடையாது. இந்த பயிற்சி மூலம், கூட்டுறவு சங்ககள் தங்கள் பகுதிக்கு தேவையான சான்று பெற்ற விதைகளை, தாங்களே உற்பத்தி செய்ய திட்டம் தீட்டி செயல்பட வேண்டும். அதுவே விவசாயிகளுக்கு செய்யும் பணியாகும் என்றார்.

பெரம்பலூர் மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர், முரளீதரன் பெரம்பலூர், விதைச் சான்று அலுவலர், பழனிச்சாமி, விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் தெய்வீகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50 கூட்டுறவு சங்கங்களின் செயலர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் விதைச் சான்று அலுவலர் பழனிச்சாமி வரவேற்றார். அரியலூர் விதைச் சான்று அலுவலர் காசிநாதன் நன்றி கூறினார்.

## மழை நீரை சேமிக்க வேண்டுகோள்

மழை நீரை சேமித்து பாசனத்துக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர்.

இது குறித்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பது:

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் தற்போது நீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பெய்யும் மழையால், வயல்களில் கூடுதலாக தேங்கும் நீரை வெளியேற்றாமல், வாய்க்கால்களில் வடிய விடாமல் மாற்று வழியில் நீரை சேமித்து வைத்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த நடவடிக்கையால் அடுத்த பாசனத்துக்கு நீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## மானியத்தில் 6 விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்

திருச்சி மாவட்ட வேளாண் பொறியியல்துறை சார்பில் 6 விவசாயிகளுக்கு ரூ.3.27 லட்சம் மானியத்தில் வேளாண் கருவிகளை மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெள்ளிக்கிழமை வழங்கினார்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2012-13-ம் ஆண்டில் 15 வகையான புதிய நவீன மற்றும் விலை உயர்ந்த வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.92.71 லட்சம் மானியத்தில் 100 விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 60% மானியத்திலும், பிற பிரிவினருக்கு 50% மானியத்திலும் இந்த கருவிகள் வழங்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை 6 விவசாயிகளுக்கு ரூ.8.5 லட்சம் மதிப்புள்ள பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, ரோட்டோவேட்டர் உள்ளிட்ட வேளாண் கருவிகளை ரூ.3.27 லட்சம் மானியத்தில் ஆட்சியர் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த. தியாகராஜன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் எஸ். தியாகராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வேளாண் திட்டப் பணிகள் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் வேளாண் துறை சார்ந்த திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் அண்மையில் ஆய்வு செய்தார்.

மாநில வேளாண் மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் அலுவலர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி குறித்தும், ஸ்டாமின் வளாகத்தில் நடைபெறும் 2 ஆண்டு டிப்ளமோ பயிற்சி அளிக்கும் வேளாண் கல்லூரியையும் ஆய்வு செய்த ஆட்சியர், அங்கு பயிலும் மாணவ, மாணவிகளிடம் கல்வியின் தரம் குறித்து விசாரித்தார்.

தொடர்ந்து, ஸ்டாமின் வளாகத்தில் அமைந்துள்ள உயிர் உர உற்பத்தி மையத்தில் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் முறை குறித்தும், உற்பத்தி செய்யப்பட்ட உயிர் உரங்களின் இருப்பு குறித்தும் ஆய்வு செய்தார்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் நவீன நுண்ணூட்டக் கலவை மையத்தின் கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க அறிவுறுத்தினார். அங்கு செயல்பட்டு வரும் மண்பரிசோதனை ஆய்வகம், நூலகத்தைப் பார்வையிட்டார்.

அண்ணா பண்ணை விதை சுத்திகரிப்பு நிலையத்தில் விதை சுத்திகரிப்பு நிலைய பணிகளையும், நடவுமுறை துவரை சாகுபடி செய்யப்பட்ட வயலையும், அருகில் அமைந்துள்ள தோட்டக்கலை பண்ணையில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வு செய்தார். தோட்டக்கலை பண்ணையில் மூங்கில் நாற்றங்கால், மா ஒட்டு சேகரிக்கும் முறைகளையும் ஆட்சியர் பார்வையிட்டார்.

வேளாண்மை இணை இயக்குநர் (பொ) பா. எம்பெருமாள், வேளாண்மைத் துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) கா. பாலன், ஸ்டாமின் துணை இயக்குநர் குணசேகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 33 அடி

சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 33 அடியாக உள்ளது. அணையின் முழு கொள்ளளவு 120 அடியாகும்.

அணைக்கு வினாடிக்கு வெறும் 1229 கன அடி நீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 500 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

## கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு

தென் வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தமிழக கடலோர பகுதியில் நிலை கொண்டுள்ளதால் அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலோர மாவட்டங்களில் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் வங்கக்கடல் பகுதியில் கடந்த புதன்கிழமை குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. அது தற்போது நகர்ந்து தமிழக கடலோர பகுதியில் ஆந்திர கடல் பகுதி வரை நிலை கொண்டுள்ளது. இதனால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்யும். உள் மாவட்டங்களில் ஆங்காங்கே மழை இருக்கும். குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடல் சீற்றம்: கடலில் 45 கி.மீ முதல் 55 கி.மீ வரை பலத்த காற்று வீசும். அதனால், கடலில் அலைகள் சீற்றத்துடன் காணப்படும். சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

ஓரிரு இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. தரைக் காற்று பலமாக வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்தள்ளது.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி தமிழகத்தில் பதிவான மழை (மில்லி மீட்டரில்): மணிமுத்தாறு, ராமேசுவரம், ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சாத்தான் குளம் -30, தொண்டி, பாம்பன், ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், ராதாபுரம், பாளையம்கோட்டை- 20, நாகர்கோயில், பேச்சிப்பாறை, பூதப்பாண்டி, கன்னியாகுமரி, சேரன்மாதேவி, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, காரைக்குடி, தேவகோட்டை, காரைக்கால், வேதாரண்யம், நாகப்பட்டினம், முதுகுளத்தூர், மற்றும் ராமநாதபுரம் -10.

இன்றைய வேளாண் செய்திகள்

29.12.2012 A.M

## தண்ணீரின்றி கருகும் மக்காச்சோளம் : தேனி அருகே விவசாயிகள் கவலை

வருஷநாடு : கண்டமனூர் அருகே அம்பசாமுத்திரம் பகுதிகளி,ல் தண்ணீர் இல்லாமல் மக்காச்சோளப்பயிர்கள் கருகி வருவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கண்டமனூர்,அம்பாசமுத்திரம், கோவிந்தநகரம்,குப்பிநாயக்கன்பட்டி,கோணம்பட்டி, ஆத்தாங்கரைப்பட்டி பகுதிகளில்,மானாவாரி விவசாயம் அதிகமாக உள்ளது.ஆண்டுதோறும் தென் மேற்கு பருவ மழையை நம்பி மானாவாரி விவசாயிகள் மக்கச்சோளம்,கம்பு,சோளம் பயிரிட்டு வருகின்றனர்.

தற்போது 'பூ' விட்டு காய்க்கும் பருவத்தில், வடக்கிழக்கு பருவ மழையும் ஏமாற்றி விட்டதால், மக்காச்சோளம் தண்ணீர் இன்றி கருகி வருகிறது .

இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய சங்க மாவட்ட செயலாளர் சென்ன கேசவன் கூறியதாவது:

இந்தாண்டு பருவ மழை பெய்யாததால், மானாவாரிவிவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடுகின்றனர்.பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட நிர்வாகம் நிவாரணம் வழங்க வேண்டும்,என்றார்.

ஐயப்பன் (அம்பாசமுத்திரம் விவசாயி):

எனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தில் வங்கியில் கடன் வாங்கி மக்கச்சோளம் பயிரிட்டேன்.தற்போது மழை இல்லாததால் கிணற்றில் தண்ணீர் இல்லை.அப்படி இருந்தாலும் மின்சாரம் இல்லை . இதனால் பயிர்கள் கருகி வருகின்றன,என்றார்.

## விதைநெல்லாவது தக்க வைக்க போராட்டம் கடைசி வாய்ப்பாக ஆழ்துளை கிணறுகள்

ஆர்.எஸ்.மங்கலம் : ராமநாதபுரம் மாவட்டத்தின் நெல்களஞ்சியமான திருவாடானை தாலுகா மற்றும் அதன் எல்லையை ஒட்டியுள்ள பல கிராமங்களில், கருகிவரும் நெற்பயிரை காப்பாற்ற அல்லது விதை நெல்லையாவது தக்க வைத்துக்கொள்ள விளை நிலங்களில் ஆழ்துளை கிணறு

அமைத்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

திருவாடானை தாலுகாவில் 42 ஆயிரத்து 450 எக்டேரில், நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. பருவமழை பொய்த்து போனதால், குளங்களில் கிடந்த சிறிதளவு நீரையும் காலி செய்துவிட்டனர் விவசாயிகள் கடைசிவரை போராடி விதைத்த விதை நெல்லையாவது கைப்பபற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இதனால் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணியில் சில விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்ட எல்லை பகுதிகளான ஆர்.எஸ்.மங்கலம், பாரனூர், செங்குடி, பிச்சனார்கோட்டை, ஆவரேந்தல் உட்பட பல பகுதிகளில் 80 முதல் 90 அடி வரை ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் பெறுகின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி முனியான்டி கூறியதாவது: ஆழ்துளை கிணறு அமைக்க ஒரு அடி ஆழத்திற்கு கூலி 140 ரூபாய். 90 அடிக்கு 12 ஆயிரத்து 600, குழாய் உட்பட இதர செலவுகளுடன் 25 ஆயிரம் ரூபாய் ஆகிறது. இது தான், இனி நிரந்தரம் என்பதால் செலவை பற்றி கவலைப்படாமல் அமைத்து வருகிறோம். ஒரு ஏக்கரில் தண்ணீர் பாய 32 மணி நேரம் வரை ஆகிறது, என்றார்.

பாரனூர் விவசாயி பாலமுருகன் கூறியதாவது: ஆழ்துளை கிணறு அமைத்துள்ள விவசாயிகளிடம் இருந்து, விதைத்த விதை நெல்லையாவது காப்பாற்ற வேண்டி, ஒரு மணி நேரத்திற்கு 150 ரூபாய் வீதம் ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து தண்ணீர் பாய்ச்சி வருகிறோம், என்றார்.

## ரூ.ஒரு கோடி மானியக்கடன் திட்டம் விண்ணப்பிக்க முனைவோர் இல்லை

விருதுநகர் : தமிழக அரசின் ஒரு கோடி மானியக்கடன் திட்டத்தில் விண்ணப்பிக்க, பெண் தொழில் முனைவோர்கள் இல்லாததால், அதிகாரிகள் தவிக்கின்றனர்.

தமிழகத்தில் மாவட்ட தொழில் மையம், தொழில் முதலீட்டு மையம் இணைந்து, ஒரு கோடி ரூபாய் மானியக்கடன் திட்டத்தை செயல்படுத்த உள்ளன. பட்டதாரி தொழில் முனைவோர் விண்ணப்பம் செய்தால், பயிற்சி வழங்கப்பட்டு, வங்கியின் மூலம் கடன் தொகை பெற்று தரப்படும்.

இதில் அதிகபட்சமாக, அரசு 25 லட்சம் ரூபாய் மானியம். கடனை முறையாக திருப்பி செலுத்தினால், வட்டி மானியமாக 3 சதவீதம் வழங்கப்படும். இத்திட்டத்தில் இடம், கட்டடங்களின் மதிப்பு கடனில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், தமிழகத்தில் 1000 பேருக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் மாவட்ட தொழில் மையத்தை அணுகும்படி கூறியுள்ளனர். இதற்காக அரசு, 100

கோடி ரூபாய்க்கு நிர்வாக அனுமதி வழங்கி, 51 கோடி ரூபாயை வழங்கியுள்ளது.
இதில், பெண்களுக்கு 50 சதவீதம் முன்னுரிமை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. பல மாவட்ட தொழில் மையங்களில், பெண் தொழில் முனைவோர்கள் குறைந்த அளவில் விண்ணப்பித்துள்ளனர். இதனால்,இத்திட்டத்தை முழு அளவில் செயல்படுத்த முடியாமல், அதிகாரிகள் தவிக்கின்றனர்.

## தண்டு துளைப்பான் நோய் தாக்கல் சாய்ந்து வரும் நேந்திர வாழை மரங்கள்

கூடலூர் : கூடலூர், பந்தலூர் பகுதியில் தண்டு துளைப்பான் நோய் தாக்கி நேந்திர வாழை மரங்கள் சாய்ந்து விழ துவங்கியுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கூடலூர், பந்தலூர் பகுதிகளில் ஆண்டுக்கு சுமார் 925 ஹெக்டர் பரப்பளவில் நேந்திர வாழை பயிரிடப்படுகிறது.
வாழையை தாக்கும் தண்டு துளைப்பான் நோய், கடந்த சில ஆண்டுகளாக கட்டுக்குள் இருந்ததால், நல்ல மகசூல் கிடைத்தது.
இந்நிலையில், தற்போது மீண்டும் நேந்திர வாழை மரங்களை தண்டு துளைப்பான் நோய் தாக்க துவங்கியுள்ளது.
இதனால், குறைந்த பட்சம் 10 கிலோ காய் கிடைக்க வேண்டிய வாழை மரத்தில், தற்போது, 2 கிலோ கூட காய்கள் கிடைப்பதில்லை.
மேலும், நோய் தாக்கி பல வாழை மரங்கள் சாய்ந்து வருவதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. "பாதிக்கப்பட்ட பகுதிகளை, தோட்டக்கலை துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து, நோயை முழுமையாக
கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மானிய விலையில் வேர்க்கடலை விதை விவசாயிகள் பயன்பெற அழைப்பு

செய்யூர் : விவசாயிகளுக்கு தேவையான வேர்க்கடலை விதை, 50 சதவீதம் மான்ய விலையில் வழங்கப்படும் என, சித்தாமூர் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.
சித்தாமூர் வேளாண்மைத்துறை அலுவலகத்தில், விதை கிராம திட்டத்தின் கீழ் நெல், வேர்கடலை, பயிறு வகைகள் போதுமான அளவு இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.
மார்கழி மாதத்தில், ஏராளமான விவசாயிகள் வேர்க்கடலை பயிரிடுவர். இவர்களுக்கு தேவையான வேர்க்கடலை, தற்போது, 9 டன் இருப்பில் உள்ளது. ஒரு கிலோ, 82 ரூபாய். ஆனால், கிராம திட்டத்தின் கீழ், 50 சதவீத மான்ய விலையில், கிலோ, 41 ரூபாய்க்கு வழங்கப் படுகிறது.

மேலும், டி9 உளுந்தும், மூன்று டன் இருப்பில் உள்ளது. மான்ய விலையில், கிலோ, 50 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நீர் வள, நிலவள திட்டத்தின் கீழ், மாற்றுப்பயிர் செய்யும், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இந்த உளுந்து வகை, நூறு சதவீதம் மான்ய விலையில் கிடைக்கும்.

சித்தாமூர் வேளாண்மை துறை அலுவலகத்தில், ஏ.டி.ட்டி45 நெல் விதை, 4 டன்னும், ஏ.டி.ட்டி37 ரக நெல் விதை, 6 டன்னும் இருப்பில் உள்ளன. மான்ய விலையில், 18 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது.

தேவையான விவசாயிகள் வேளாண்மைத் துறை அலுவலகத்தில், இவற்றை பெற்று பயன் அடையலாம் என, வேளாண்மை துறை உதவி இயக்குநர் கலைமணி தெரிவித்தார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

29.12.2012 A.M

## முருங்கைக்காய் விலை கிலோ ரூ.180



நாகர்கோவில் : கன்னியாகுமரியில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. உச்சகட்டமாக முருங்கைக்காய் விலை கிலோ ரூ.180க்கு மொத்த விற்பனை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. குமரியில் கோயில், கொடை விழா மற்றும் திருமண நிகழ்ச்சிகள் காரணமாக பங்குனி, சித்திரை மற்றும் கார்த்திகை, மார்கழி மாதங்களில் காய்கறி விலை மிகவும் அதிகமாக இருக்கும்.

பொங்கலுக்கு பின்னர் விலை குறையும். ஆனால் நடப்பாண்டில் காய்கறிகளின் விலை விண்ணை முட்டும் அளவு உயர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு போதுமான விலை கிடைக்காவிட்டாலும் கமிஷன் வியாபாரிகளே கூடுதல் விலைக்கு காரணம் என கூறப்படுகிறது.

மேலும் தற்போது விவசாய நிலங்கள் குறைந்து வருவதும் முக்கிய காரணமாகும். குமரியில் நெல்லுக்கு அடுத்து வாழை மற்றும் வெள்ளரி, வெண்டைக் காய், பாகற்காய் போன்றவை உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வரும். இதனால் வெள்ளரி, பூசணி கிலோ ரூ.3 முதல் ரூ.4க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளில் விவசாய நிலங்கள் வீட்டு மனையாக மாற்றப்பட்டு வருவதால் வெள்ளரியின் விலை ரூ.30 எட்டியுள்ளது.

**யாருக்கு மானியம்**

ஒவ்வொரு முறையும் டீசல் விலை உயர்த்தப்படும்போது, பெரிய போராட்டமே வெடிக்கும். நாடு முழுவதும் லாரிகள் ஓடாது. நாட்டின் பொருளாதாரமே முடங்கும். பிறகு விலையை குறைத்த பிறகே லாரிகள் ஓட ஆரம்பிக்கும். இப்படித்தான் பல ஆண்டுகளாகவே நடந்து வருகிறது. மானியம் என்பது இல்லாதவர்களுக்குத்தான். ஆனால் டீசலை பொருத்தவரை இல்லாதவர்களை எப்படி கண்டுபிடிக்க முடியும். லாரிகள் மட்டுமல்ல,

பல லட்சம் விலையுள்ள சொகுசுக் கார்களும் டீசலில்தான் இயங்குகின்றன. லாரிகளுக்கு கிடைக்கும் மானிய விலை டீசல், சொகுசுக் கார்களுக்கும் போகிறது. இதை தடுக்க முடியவில்லை. தடுக்க வேண்டுமானால் இரட்டை விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படி வந்தால் லாரியில் மொத்தமாக வாங்கி கறுப்பு சந்தையில் கார்களுக்கு விற்பார்கள். அதே கதைதான் கெரசினுக்கும். ஏழைகளுக்கு ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும் அதே அளவுக்கு, வெளியில் டீசலிலும் பெட்ரோலிலும் கலப்படம் செய்ய கெரசின் கடத்தப்படுகிறது. 15 விலையில் கிடைக்கும் கெரசினை 50 விலையுள்ள டீசலில் கலக்கிறார்கள்.

அதையும் அரசால் தடுக்க முடியவில்லை. மானியம் இப்படி விரயமாவதை தடுக்க என்னதான் வழி? விலையை ஏற்றுவதுதான். அதுவும் ஒரேயடியாக ஏற்றாமல், படிப்படியாக ஏற்றுவது. அந்த முடிவைத்தான் அரசும் எடுத்துள்ளது. ஒரேயடியாக உயர்த்தினால்தானே பிரச்னை, மாதத்துக்கு 1 வீதம் தொடர்ந்து 10 மாதத்துக்கு உயர்த்தினால் 10வது மாத இறுதியில் டீசல் விலையை 10 உயர்த்தி விடலாம் என கணக்குபோட்டுள்ளது மத்திய அரசு. அதேபோல், கெரசின் விலையை மாதத்துக்கு 42 பைசா வீதம் தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு உயர்த்தவும் திட்டமிட்டுள்ளது.

இந்தியா வளர்ந்து வரும் நாடு. இதனால் வாகன விற்பனை அதிகரித்து வருகிறது. இதைத் தொடர்ந்து பெட்ரோல், டீசலின் பயன்பாடும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஏற்கனவே மானிய இழப்பு அதிகமாக இருக்கிறது. இதை அதிகரித்துக் கொண்டே போனால், நிதிப் பற்றாக்குறையை எப்படி சமாளிக்க முடியும்? உற்பத்தி விலையை விட விற்பனை விலையை குறைவாக வைத்து எத்தனைநாள்தான் விற்க முடியும்? அது ஆரோக்கியமான பொருளாதாரத்துக்கு அழகல்ல. எல்லாவற்றின் விலையும் உயரும்போது, டீசல் விலை மட்டும் அப்படியே இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நன்றாக இருக்காது.